05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# PEMIKIRAN SOSIAL DALAM EPIK PENDEK KARYA BHARATHIDASAN

# பாரதிதாசன் குறுங்காப்பியங்களில் சமுதாயச் சிந்தனைகள்

RAJENDRAM PERUMAL
இராஜேந்திரம் பெருமாள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT
UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA SASTERA
(KESUSASTERAAN TAMIL)
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
மொழியியல் தொடர்பாடல் புலம் சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

2017

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**PEMIKIRAN SOSIAL DALAM EPIK PENDEK KARYA BHARATHIDASAN**

## ABSTRAK

Objektif kajian ini adalah untuk mengenal pasti pemikiran sosial yang terdapat dalam epik pendek Bharathidasan. Kedua, menganalisis pandangan masyarakat umum terhadap pemikiran sosial yang terdapat dalam epik pendek Bharathidasan dan yang ketiga menghuraikan pandangan Bharathidasan yang inginkan masyarakat yang progresif sekitar abad kedua puluh sepertimana yang digambarkan dalam epik pendek karya Bharathidasan. Sebanyak lima buah epik pendek karya Bharathidasan iaitu *Canceevi parvatatin caral, Puratcikkavi, Virattay, Kudumpa vilakku and Irunta vitu* telah dipilih sebagai sumber utama kajian. Ini merupakan kajian kualitatif dan dibuat berdasarkan pendekatan kajian perpustakaan. Berdasarkan metodologi ini, sumber primer dikumpulkan dan dianalisis bersama sumber sekunder dan maklumat-maklumat yang berkait rapat dengan kajian. Kajian ini diperkukuh lagi dengan pengaplikasian teori Rasionalisme Periyar. Penemuan kajian yang diutarakan mengemukakan ideologi-ideologi yang harus dijadikan teladan dalam kehidupan masyarakat India demi menjaga keharmonian dan kesejahteraan masa depan. Pemikiran mengenai pendidikan memperkatakan kepentingan pendidikan terhadap kaum wanita dan pendidikan untuk semua orang tanpa mengira status kedudukan sosial. Pemikiran Bharathidasan tentang sistem kasta pula membawa kesedaran bahawa sistem tersebut harus dimansuhkan kerana amalan itu mengukuhkan sistem hamba dan pemikiran karut pula digambarkan sebagai suatu amalan yang tidak bersesuaian dengan zaman moden. Dari segi pemikiran kesamarataan pula karya Bharathidasan mengemukakan pemikiran tentang menjaga kepentingan golongan buruh dan golongan miskin. Manakala dari segi pemikiran feminisme pula Bharathidasan telah mengemukakan ideologi kebebasan wanita, kesamarataan kedudukan dalam keluarga, kebebasan memilih jodoh dan hak mendapat harta sama rata seperti anak lelaki. Dapatan kajian secara keseluruhannya menunjukkan bahawa masyarakat India harus keluar daripada kongkongan pemikiran sosial yang tidak bersesuaian dengan zaman moden dan perlu mempunyai pemikiran terbuka untuk mencapai kehidupan yang sejahtera pada masa depan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**SOCIAL THOUGHTS IN SHORT EPICS OF BHARATHIDASAN**

## ABSTRACT

The objective of this research is to identify the social thoughts, analyse the views of Tamilians against the revolutionary ideas of Bharathidasan and to analyse his views in the making of a progressive Tamil society at the beginning of the twentieth century as portrayed in his epics. Five epics of Bharathidasan were chosen for this research, namely *Canceevi parvatatin caral, Puratcikkavi, Virattay, Kudumpa vilakku and Irunta vitu.* This is a qualitative research and was carried out based on library search. Based on this methodology, primary sources were collected and analysed along with secondary sources. This research is based on Periyar's Rationalism Theory. The findings of this research show that Bharathidasan has put forward the ideologies that should be followed by the Indian community in the future. The ill-effects of the socio-economic status which has deprived education for all and women, in particular; the caste system and superstitious beliefs which denied fair treatment of women and social improvement are the subjects dealt with in these epics. These that have hampered social enhancement and that are not in line with modern times, are vehemently criticised by Bharathidasan. With regard to equality Bharathidasan makes practical proposals about looking after the welfare of labourers and the down trodden. Regarding feminism Bharathidasan suggests emancipation of women, equality in the family structure, freedom to choose their life partners and the right to inherit wealth like male children. The findings imply that the Indian society should come out of the out dated social thoughts which are not suitable for the modern times and should be open minded to lead a happy life in the future.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**பாரதிதாசன் குறுங்காப்பியங்களில் சமுதாயச் சிந்தனைகள்**


**ஆய்வுச்சுருக்கம்**

இந்த ஆய்வு பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் வெளிப்படுகின்ற இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்திய மக்களின் சமுதாயச் சிந்தனைகளை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. இந்த ஆய்வில் பாரதிதாசனின் ஐந்து குறுங்காப்பியங்களான *சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக் கவி, வீரத்தாய், குடும்ப விளக்கு, இருண்ட வீடு* ஆகியன ஆய்வுக்கான முதன்மை மூலங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தரப்பகுப்பாய்வு ஆய்வு நெறி இந்த ஆய்வினை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரப்பகுப்பாய்வில் விளக்கமுறை நெறியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வு முழுமையும் நூலக ஆய்வாக அமைந்துள்ளது. இந்த ஆய்வு நெறியின் அடிப்படையில், முதன்மை மூலங்கள் திரட்டப்பட்டு அவை இரண்டாம் தர மூலங்கள், ஆய்வுக்குப் பொருத்தமான தரவுகள் ஆகியவற்றைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பெரியாரின் பகுத்தறிவுக் கோட்பாடு இந்த ஆய்வைச் செம்மைப்படுத்தும் பொருட்டுக் கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் அடைவாகக் கண்டறியப்பட்டுள்ள சிந்தனைகள் எதிர்கால இந்திய சமுதாயம் சுபிட்சத்துடனும் அமைதியுடனும் வாழ்வதற்கான சிந்தனைகளாக விளங்குவதாக அறியப்பட்டுள்ளது. கல்வி அடிப்படையிலான சிந்தனை, பெண் கல்வியின் இன்றியமையாமையையும் எவ்விதப் பாகுபாடுமின்றி அனைவருக்குமான கல்வி எனும் சிந்தனையையும் முன்வைக்கின்றது. பாரதிதாசனின் சாதியம் மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான சிந்தனைகளுள் சாதியம் என்பது அடிமைத்தனத்தை வலுப்படுத்துவதால் அஃது ஒழிக்கப்பட வேண்டும் என்றும் மூடநம்பிக்கையானது நவீன உலகத்திற்கு ஏற்புடைய சிந்தனையாகாது என்பதாகவும் சுட்டப்பட்டுள்ளது. பொதுவுடைமைச் சிந்தனைகள் எனும் அடிப்படையில் பாரதிதாசனின் படைப்பிலக்கியங்கள் தொழிலாளர் மற்றும் ஏழைகளின் நலன் பேணுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. பெண்ணியச் சிந்தனைகளின் அடிப்படையில் பாரதிதாசன் பெண் விடுதலை, பெண்ணுக்குக் குடும்பத்தில் சம உரிமை, தனக்கான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, சொத்துரிமை ஆகிய சிந்தனைகளை முன் வைக்கின்றார். இந்த ஆய்வின் ஒட்டுமொத்த அடைவாக இந்திய சமுதாயம் எதிர்காலத்தில் சுபிட்சமான நல்வாழ்வு வாழ வேண்டுமெனில் நவீன காலத்திற்கு ஒவ்வாத சமூக வழக்கங்களிலிருந்து வெளி வந்து திறந்த சிந்தனையுடன் வாழ வேண்டும் எனும் கருத்தாக்கத்தை முன்வைக்கின்றது.


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| **ஆய்வாளர், நெறியாளர் உறுதி மொழி** | **ii** |
| **சமர்ப்பணம்** | **iii** |
| **நன்றியுரை** | **iv** |
| **Abstrak** | **vi** |
| **Abstract** | **vii** |
| **ஆய்வுச்சுருக்கம்** | **viii** |
| **பொருளடக்கம்** | **ix** |
| **வரைபடப் பட்டியல்** | **xiii** |
| **சுருக்கக் குறியீட்டு விளக்கம்** | **xiv** |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 10 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 12 |
| 1.5 ஆய்வு வினா / கருதுகோள் | 12 |
| 1.6 ஆய்வு நன்மைகள் | 12 |
| 1.7 ஆய்வு எல்லை | 14 |
| 1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள் | 15 |
| 1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள் | 15 |
| 1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள் | 16 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi




1.9 கலைச்சொல் விளக்கம் 16

1.9.1 குறுங்காப்பியம் 17

1.9.2 சமுதாயச் சிந்தனைகள் 17

1.10 தொகுப்புரை 19

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 20

2.2 பாரதிதாசன் பற்றிய முனைவர்பட்ட ஆய்வுகள் 21

2.3 பாரதிதாசன் பற்றிய முதுகலைப்பட்ட ஆய்வுகள் 28

2.4 சமுதாயச் சிந்தனைகள் பற்றிய முனைவர்பட்ட ஆய்வுகள் 31

2.5 சமுதாயச் சிந்தனைகள் பற்றிய முதுகலைப்பட்ட ஆய்வுகள் 36

2.6 தொகுப்புரை 40

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 41

3.2 ஆய்வு வழிமுறைகள் 41

3.3 ஆய்வு வடிவமைப்பு 43

3.4 ஆய்வு அணுகுமுறை 44

3.4.1 பகுப்புமுறைத் திறனாய்வு 44

3.4.2 விளக்கமுறைத் திறனாய்வு 44

3.5 தரவு சேகரிப்பு முறை 45

3.6 தரவுப் பகுப்பாய்வு முறை 46

3.7 ஆய்வுக் கோட்பாடு 46

3.7.1 அனைவருக்கும் கல்வி 48


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi




3.7.2 சாதிப் பாகுபாடு, மூட நம்பிக்கை ஒழிப்பு 49

3.7.3 பொதுவுடைமைச் சிந்தனை 52

3.7.4 பெண்களின் நிலை 54

3.8 கோட்பாட்டுக் கட்டமைப்பு 56

3.9 தொகுப்புரை 57

**இயல் 4 பகுப்பாய்வும் கண்டுபிடிப்புகளும்**

4.1 முன்னுரை 58

4.2 பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் இடம்பெற்றுள்ள சமுதாயச் சிந்தனைகள் 61

4.2.1 பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் காணப்படும் அனைவருக்கும் கல்வி என்ற கொள்கை 61


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.2 பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் சாதி மறுப்பும் மூட நம்பிக்கை ஒழிப்பும் 76

4.2.3 பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் பொதுவுடைமைச் சிந்தனைகள் 88

4.2.4 பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் பெண்ணியச் சிந்தனைகள் 93

4.2.4.1 பெண்களுக்குச் சமத்துவம் 101

4.2.4.2 மணவிலக்கு 122

4.2.4.3 காதல் மணம் 123

4.2.4.4 குழந்தைப்பேறு 123

4.2.4.5 கர்ப்பத்தடை 126

4.2.4.6 சொத்துரிமை 127


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.3 பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் வெளிப்படும் முற்போக்குச் சிந்தனைகளுக்கு எதிரான மக்களின் நிலைப்பாடு 128

4.3.1 கல்வியின்மை 129

4.3.2 சாதிப் பாகுபாடும் மூட நம்பிக்கையும் 138

4.3.3 பொதுவுடைமைச் சிந்தனைகள் 141

4.3.4 பெண்ணடிமை நிலை 143

4.4 பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் காணப்படும் புதிய தமிழ்ச் சமூக உருவாக்கம் பற்றிய கருத்துக்கள் 147

4.4.1 அனைவருக்கும கல்வி 148

4.4.2 சாதி மறுப்பும் மூட நம்பிக்கை ஒழிப்பும் 150

4.4.3 பொதுவுடைமைச் சிந்தனை 153

4.4.4 பெண்ணியச் சிந்தனை 156

4.5 தொகுப்புரை 158

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 167

5.2 ஆய்வு முடிவுகள் 168

5.3 தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகள் 172

5.4 முடிவுரை 173

**துணைநூற் பட்டியல்** 175

**RINGKASAN EKSEKUTIF**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## வரைபடப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 43 |
| 3.2 | தரவுகள் திரட்டும் முறை | 45 |
| 3.3 | கோட்பாட்டுக் கட்டமைப்பு | 56 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| ப. | பக்கம் |
| பக். | பக்கங்கள் |
| சூ. | சூத்திரம் |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

தமிழ் இலக்கிய ஆய்வுகள் நெடுங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரதிதாசனின் இலக்கியங்கள் குறித்தும் பல்லாண்டு காலமாக ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இந்த ஆய்வு பாரதிதாசனின் குறுங்காப்பியங்களை அடிப்படையாக வைத்து அவர் சமுதாயத்துக்கு உணர்த்த விரும்பிய கருத்துக்களை ஆராயவிருக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பாரதிதாசன் தமிழ் இலக்கியத் துறைக்கும் சமுதாயத்துக்கும் புரட்சிகரக் கருத்துக்களைத் தந்த கவிஞராவார். இலக்கியத் துறையில் கவிதை, நாடகம், இசைப்பாடல், உரைநடை, சொல்லாய்வு இவ்வாறு பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் தமது சிந்தனைகளை வெளிப்படுத்தியிருக்கின்றார். “பாரதிதாசன் குறுங்காப்பியங்களில் சமுதாயச் சிந்தனைகள்” எனும் தலைப்பிலான இந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



ஆய்வின் முதல் இயலானது ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு எல்லை, ஆய்வு நன்மைகள், ஆய்வுச் சான்றாதாரங்கள் ஆகியவற்றை விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

## 1.2 ஆய்வுப் பின்னணி

பாரதிதாசன் ஏப்ரல் 29, 1891இல் பாண்டிச்சேரியில் பிறந்தார். சுப்புரத்தினம் என்பது இவருடைய இயற்பெயர். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றால் தன் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றியமைத்துக் கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் பரவலாக அழைக்கப்பட்டார். இவர் கவிதை வடிவில் குயில் எனும் பெயரில் ஒரு திங்களிதழ் நடத்தி வந்தார். பாரதிதாசன் கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள் இணையருக்குப் பிறந்தார். பழனியம்மாள் என்பவரை 1920ஆம் ஆண்டில் மணந்து கொண்டார் (பாலசுப்பிரமணியன், 1986, பக்.9-25).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவர் சிறுவயதில் பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும், தமிழ்ப்பள்ளியில் பயின்ற காலமே அதிகமாக இருந்தது. 18 வயதிலேயே புலவர் பட்டம் பெற்றார். அவரின் சிறப்புணர்ந்த அரசியலார் அவரை அரசினர் கல்லூரித் தமிழாசிரியர் ஆக்கினர். 58 வயது வரை சுமார் 40 ஆண்டுகள் ஆசிரியர் பணியாற்றினார். பாவேந்தர் பாரதிதாசன் “கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன்” எனப் பல புனை பெயர்களில் புதுவையிலிருந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



வெளியான தமிழ் ஏடுகளில் எழுதி வந்தார். இவர் ஏப்ரல் 21, 1964ஆம் ஆண்டில் தம் 72ஆம் அகவையில் காலமானார் (பாலசுப்பிரமணியன், 1986, பக்.9-25).

பாரதியாருக்கு இணையாகத் தமிழ்க்கவிதை வரலாற்றில் கற்பனை வளத்திலும் கவித்துவத்திலும் சிறப்பாக விளங்கியவர் பாரதிதாசன் ஒருவரே. "பாரதியார் இன்று நமக்கு வைத்து விட்டுப் போன சொத்துக்கள் பல. அவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் என்று சொல்ல வேண்டும்" என்று வானொலியில் விமரிசனம் செய்தார் புதுமைப்பித்தன் (பாலசுப்பிரமணியன், 1986, ப.25). பாரதியாரின் தாக்கத்தைப் பெற்ற கவிஞர்களில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் பாரதிதாசன். இதனை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> “பாரதியாரின் எதிரொலியைப் பாரதிதாசனுடைய கவிதைகளில் காணலாம். புரட்சிக் கொள்கைகள் உணர்ச்சி பெற்ற வேகம், சொல்லழகு ஆகியவற்றைப் பார்க்கும்போது பாரதிதாசனின் கவிதைகள் பாரதியாரின் கவிதைகள் போலவே தோன்றும். ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’ என்ற பாரதிதாசனின் காவியம் பாரதியின் பாடல்களைப் போலவே மூடக் கொள்கைகளுக்கு ஒரு சவுக்கடி. பெண்ணுரிமை பற்றிக் கூறும்போது பாரதியாரின் பாடல்களையும் மிஞ்சி விடுகிறார் பாரதிதாசன்” என்ற அறிஞர் சோமலெயின் கருத்துரையின் வழி அறிய முடிகிறது (முத்தையா, 1991, பக்.36-37).

பாரதிதாசன் பாரதியாருக்குப் பின் தனிப் பெருங்கவிஞராக விளங்கினார் என்பது முற்றிலும் உண்மை. 20 வயது பாரதிதாசனும் 28 வயது பாரதியாரும் புதுவையில் வேணுநாயக்கர் வீட்டுத் திருமண நிகழ்வில் முதன்முறையாகச் சந்தித்துக் கொண்டபோது குரு தன் சீடனையும் சீடன் தன் குருவையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



ஒருவருக்கொருவர் கண்டுகொண்டனர். அப்போதுதான் கவிராஜனாக விளங்கிய பாரதி தமது, "வந்தே மாதரம்" கவிதையைப் பாரதிதாசன் பாடக்கேட்டு மகிழ்கின்றார். அடுத்து, பாரதிதாசனும்

எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா - அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் - அந்தத்
தாயின் கைப் பந்தென ஓடுமடா

(பாரதிதாசன், 1992a, ப.10)

என்ற பாடலைப் பாட, அதைக் கேட்டுப் பாரதியே வியந்துபோனார். அப்பாடலே முதன் முதலாகப் பாரதிதாசனைத் தமிழ்கூறு நல்லுலகுக்கு அறிமுகப்படுத்தியது. இப்பாடல் அதற்கு முன்பே இதழில் வெளிவந்துள்ளது என்று முனைவர் இரா. இளவரசு தம் நண்பகல் ஞாயிறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். பாரதிதாசன் பாரதியாரைக் குருவாகக் கொண்டு வளர்ந்தவர். ஆனால், கொள்கையில் முழு அளவில் அவரைப் பின்பற்றவில்லை. தமக்கென்று தனிக் கொள்கைகளை வகுத்துக்கொண்டு சுதந்திரமாகப் பாடும் தன்மை கொண்டு விளங்கினார் பாரதிதாசன். இருபதாம் நூற்றாண்டில் புரட்சிக் கவிதைகளைப் பாடியவர் கவிஞர் பாரதிதாசன். தமிழினத்தின் மீட்சியை வற்புறுத்தியும் தமிழின் தன்னிகரில்லாச் சிறப்பினை விதந்து போற்றியும் உரிமைக் குரல் கொடுத்தவர் பாரதிதாசன். தாய் மொழியாகிய தமிழை உயிருக்கும் மேலாக நேசிக்க வேண்டும் என்ற உணர்வை ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் தோன்றச் செய்தவர் பாரதிதாசன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



மேற்கூறிய பாரதியாரின் தொடர்பு பாரதிதாசனின் முதல் பாடலை அச்சில் வரச்செய்து தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. பாரதியாரின் நட்பு அவர்தம் வாழ்வில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது என்பதைப் பாரதிதாசன்,

> பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
> காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்
> சுப்பிரமணிய பாரதி தோன்றியென்
> பாட்டுக்குப் புதுமுறை, புதுநடை காட்டினார்.
> (பாரதிதாசன், 1978a, ப.5).

என்று தெளிவாகக் கூறுகிறார்.

பாரதியாருக்குப் பிறகு 43 ஆண்டுகள் வாழ்ந்து அவர்தம் தமிழ்த் தொண்டைப் பின் தொடர்ந்தவர் பாரதிதாசன். பாவேந்தர் பாரதிதாசன் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்தார். மகாகவி பாரதியாருக்கு எட்டு ஆண்டுகளுக்குப் பின் பிறந்தவர் பாரதிதாசன். பாவேந்தர் பாரதிதாசன் முறைப்படி தமிழ் கற்றவர். திருப்புளிச்சாமி அய்யா என்பவர்தான் பாரதிதாசனுக்குத் தொடக்கக் கல்வி அளித்தவர். இவர் பாரதிதாசன் உள்ளத்தில் தமிழ்ப் பற்றை விளைக்கச் செய்தவர். தன்னுடைய 18ஆம் வயதில் பாரதிதாசன் புலவர் தேர்வில் புதுவை மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இளமைக் காலத்திலேயே தன் திறமையாலும் தகுதிகளாலும் புதுச்சேரி மக்களுக்கு நன்கு அறிமுகமாகிவிட்டார். மேலும், ஆறாம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்ற இவர் தான் எழுதும் கவிதைகளின் மூலம் புதுவை இலக்கிய வட்டாரத்தில் தனி ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தொடக்க காலத்தில் தெய்வங்கள் தொடர்பாகக் கவிதைகளை இயற்றினார். பிறகு, அவருடைய பார்வை தமிழினம், தமிழ்மொழி, கைம்பெண் மறுமணம், தொழிலாளர் நிலை போன்றவற்றின் மீது மாறியது. பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுதி 1938ஆம் ஆண்டு குஞ்சிதம் குருசாமி அவர்களால் வெளியிடப்பட்டது. இக்கவிதைத் தொகுதி பண்டிதர் உலகம், புதிய இலக்கியவாணர் உலகம், சீர்திருத்த உலகம் ஆகிய அனைத்துப் பகுதியினரின் பாராட்டையும் பெற்றது. மேலும், புதிய இலக்கிய உலகில் இக்கவிதைத் தொகுதி மக்களிடையே அதிக வரவேற்பையும் ஒரு பரபரப்பையும் ஏற்படுத்தியது (பாலசுப்பிரமணியன், 1986, ப.23).

1891-1964ஆம் ஆண்டு வரை வாழ்ந்த பாரதிதாசன் பெரியாரின் சமகாலத்தவர். பெரியார் 1879ஆம் ஆண்டு பிறந்தவர். பாரதிதாசன் பெரியாருக்கு 12 ஆண்டுகளுக்குப் பின்பு பிறந்து ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே இயற்கை எய்தியவர். 37 ஆண்டு காலம் ஆசிரியப் பணியுடன் கவிதை, நாடகம், திரைக்கதை, சிறுகதை, குழந்தை இலக்கியம், குறுங்காப்பியங்கள் என்று பல வகையான இலக்கியங்களைத் தமிழில் படைத்துள்ளார். இவ் இலக்கியப் பணிகளோடு காங்கிரஸ் தேசிய இயக்க, சுய மரியாதை இயக்கச் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் பாவேந்தர் பாரதிதாசன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மரபு சார்ந்த தமிழ்ப்புலவர் பெருமக்களிடமிருந்து தமிழ் இலக்கண இலக்கியத்தை முறைப்படி கற்றுத் தேர்ந்தவர் கனக சுப்புரத்தினம். தனது பிறப்பு, வளர்ப்புச் சூழலின் காரணமாக இறை நம்பிக்கையாளராக அவரது காலத்தில் வண்ணப்பாட்டுகளையும் துதியமுதுகளையும் இயற்றினார். அந்தக் காலத்திலேயே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



அவரிடம் இந்திய தேசியவாதக் கருத்துக்களின் தாக்கம் ஏற்பட்டிருந்ததைக் காணமுடிகின்றது.

மனிதர்மனி தர்க்கடிமை ஆகுமொரு தீக்கனவு
மண்ணிடை யிருப்பதில்லா
வகைக்கெனது நாட்டினர் அறப்போர் நடத்திடுவர்
வாய்மையிற் பண்டைநாளில்
எனினுமென தன்பான 'நாடின்று மற்றோர்
இனத்தவர்க் கடிமையாதல்'
என்னுமிக் கோலத்தை எண்ணியென் தோள் பார்த்து
நான் பார்த் திருக்குநேரம்
(பாரதிதாசன், 1992a, பக்.451-452)

கனக சுப்புரத்தினம், இந்துமதப் பற்றும் இறை நம்பிக்கையும் கொண்டிருந்த இந்திய தேசியவாதிகளைப் போலவே இந்திய தேசத்தை, குமரி முனையைப் பாதங்களாகவும் இமயமலையைத் தலையாகவும் கொண்ட ஒரு பெண்ணாக, தாயாக உருவகித்துப் பாடியிருக்கிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வங்கத்து வீரருன்றன் வாழ்க்கையிலே சம்பந்தி
தேசத் துருக்கரெலாம் தேவியுன்றன் அண்ணன்மார்
மீசைத் தெலுங்கர்களும் வில்லர்களும் மைத்துனர்கள்
அமிழ்தக் கவிகள் அம்புலிக்குச் சொல்லிவைத்த
தமிழ்நாட்டு வீரரெலாம் சண்பகமே, சொந்தத்தார்
நாட்டுக்கு நூலிழைக்கும் நங்கையருன் அக்கையர்கள்
வீட்டில் துணி நெய்யும் வீரர் உன்றன் அம்மான்கள்
கன்னியா குமரிமுதல் கங்கைஇமயம் வரைக்கும்
உன்னிரத்தம் சேர்ந்த உடம்புடையார் பாரதத்தார்
(பாரதிதாசன், 1992a, ப.456)

எனப் 'பாரத மாதா' தன் குழந்தையிடம் கூறுவதாகக் கவிதை இயற்றினார் கனக சுப்புரத்தினம். 'தேசிய உபாத்தியாயர்', 'கவியின் பெருமை', 'கதை இராட்டினப் பாட்டு' போன்றவற்றில் காந்தியின் சுதேசி இயக்கத்தின் கொள்கைகளைப் பாடும் கவிஞர், பாரதியாரைப் போலவே பரந்த இந்தியப் பண்பாட்டின் ஓரங்கமாகவே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்த் தேசத்தையும் பார்த்தார். இந்திய தேசியத்தை விரும்பும் உண்மையான பள்ளி ஆசிரியர் என்னும் வகையில் இளம் மாணவர்களிடையே 'சிட்டுக் குருவிப் பாட்டு', 'நிலாப் பாட்டு', 'தாலாட்டு' முதலியவற்றை எழுதி தேசியப்பற்றை வளர்த்தார் (பாரதிதாசன், 1992a, பக்.468-470).

1929ஆம் ஆண்டில் பாரதிதாசனில் ஒரு மாறுதல் கால கட்டம் தொடங்குவதைக் காண்கிறோம். பாரதிதாசனைப் போலவே காங்கிரஸ் தேசிய இயக்கத்திலிருந்த பெரியார் ஈ.வெ.ராமசாமி, 1925இல் 'குடி அரசு' வார இதழை வெளியிட்டார். இவ்விதழின் வழியாகத் தொடங்கிய சுயமரியாதை இயக்கம், எல்லா வகையான மானுட அடிமைத்தனங்களையும் சுட்டுப் பொசுக்குகின்ற பெருந்தீயாகக் கொழுந்து விட்டெரிந்து, 1929ஆம் ஆண்டிலே பிரெஞ்சு இந்தியாவுக்கும் பரவத் தொடங்கியது. அந்த இயக்கத்தின் முக்கியக் கூறாக விளங்கியவர்கள் 'தீண்டாதார்' எனப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள். தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று சொல்லப்படுபவரும் தமிழகத்தின் ஒப்பற்ற சிந்தனையாளர்களில் ஒருவருமான ம.சிங்காரவேலர் கூறியதுபோல, "பல்லாயிரக் கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் இளைப்பாறிச் செல்லும் மரநிழலாக" இருந்தது சுயமரியாதை இயக்கம் (http://keetru.com/visai/apr07/svr.php).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

புதுச்சேரியில் இவ்வியக்கத்தின் பெருந்தூணாக இருந்தவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ம.நோயேல் என்பவராவார். இவர் சுயமரியாதை இயக்கத்தினருக்குப் புரவலராக இருந்தார். இந்திய தேசியத்தின் பார்ப்பனப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



போக்கினால் வெறுப்புற்று அதிலிருந்து வெளியேறிய பாரதிதாசனால் 1929இல் இயற்றப்பட்ட "தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு" எனும் நெடுங்கவிதையை 1930இல் முதன்முறையாகக் குறுநூலாக வெளியிட்டவர் இந்த நோயேல் பெருந்தகைதான். "இந்நூலை மக்கள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், முதலிய நூல்கள் போல மனனம் செய்து இதன் கருத்துக்களை ஓர் ஆயுதமாகக் கொண்டு முன்னேற வேண்டும்" என்பதற்காகவே "தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு" எனும் இந்நூலை அச்சிட விழைந்ததாக நோயேல் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலுக்கு நூன்முகம் எழுதிய காசி. ஈ. லட்சுமண் பிரசாத் என்பார் (இவர் பிறப்பால் வட இந்திய பார்ப்பனர்), 'இந்தியச் சமுதாயத்திலுள்ள அனைத்துத் தீமைகளுக்கும் 'தீண்டாமையே' அடிப்படை எனப் பாரதிதாசன் தன்னிடம் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார் (http://keetru.com/visai/apr07/svr.php).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு" எனும் நூலின் முதல் பகுதியில் இந்தத் கவிதையுடன் மற்றொரு நெடுங்கவிதையையும் மூன்று குறுங்கவிதைகளையும் இணைத்து அச்சிட்டுள்ளனர். 'சேசு பொழிந்த தெள்ளமுது' எனும் குறுங்கவிதை கிறித்தவர்களுக்கு உள்ளேயும் புகுந்துள்ள சாதி வேறுபாடுகளுக்கும் ஏசுவின் உலகு தழுவிய மனித நேயத்துக்குமுள்ள முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறது. 'ஞாயமற்ற மறியல்' எனும் குறுங்கவிதை மாறுதல் காலகட்டத்திலிருந்த பாரதிதாசன் 'பாரத மாதா'வை முற்றிலும் மறக்க முடியாத நிலையிலிருந்தார் என்பதைக் காட்டுகிறது.

கோரும் “இமயாசல” முதல் - தெற்கில்
கொட்டுபுனல் நற் “குமரி” மட்டும் இருப்போம் - இவர்
யாருமொரு சாதியெனவும் - இதில்
எள்ளளவும் பேதமெனல் இல்லையெனவும் - நம்
பாரதநற் றேவிதனக்கே - நாம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



படைமக்கள் எனவும் நம்மிடை இக்கணம் - அந்த
ஓருணர்ச்சி தோன்றியஉடன் - அந்த
ஒற்றுமை அன்றோநமக்கு வெற்றியளிக்கும்!

(பாரதிதாசன், 1992a, ப.324)

என்றெழுதினார் பாரதிதாசன்.

பாரதியாரின் வழித்தோன்றலாகத் திகழ்ந்த பாரதிதாசன் இளமைக் காலத்திலேயே கவி பாடும் ஆற்றல் பெற்றவராயிருந்தார். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமுதாயச் சிந்தனைகள் ஆகியவை பாரதிதாசனின் பாடுபொருள்களாக இருந்தன. சமுதாயத்தில் நிலவிய ஏற்றத் தாழ்வினைக் கண்டு பொறுக்கவியலாது சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட பாடல்களை உணர்ச்சி ததும்பப் பாடியதால் புரட்சிக் கவி என்று இவர் அழைக்கப்பட்டார். புதியதொரு தமிழ்ச்சமுதாயம் உருவாக வேண்டுமென்பது பாரதிதாசனின் பெருங்கனவாக இருந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

குறுங்காப்பியம் என்பது தமிழின் தொன்மையான இலக்கிய வடிவமாகும். இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரதிதாசன் தமிழின் தொன்மையான குறுங்காப்பியம் என்ற இலக்கிய வடிவத்தைச் சமகாலச் சமுதாய நிலையைப் பாடுவதற்குத் தேர்ந்தெடுத்திருக்கின்றார். உலகப் போக்கை அறிந்து தெரிந்து கவிதைகளை எழுதியவர் பாரதிதாசன். தன்னுடைய கவிதைகளில் பல்வேறு கருப்பொருளை மையமாக வைத்துக் கவிதைகளை எழுதியுள்ளார். இவருடைய கவிதைகளில் இயற்கை, காதல், பெண்கள், புரட்சி என்று பல கருப்பொருள்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



இடம்பெற்றுள்ளன. இவர் சமுதாயம் மற்றும் சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களை மையமாக வைத்துக் கவிதைகளை இயற்றியுள்ளார். பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் அதிகமான சமுதாயச் சிக்கல்கள் இருந்ததனால் தான் அவர் சமுதாயச் சிக்கல் தொடர்பான கவிதைகளை இயற்றியுள்ளார். சிக்கல்கள் இல்லாத சமுதாயம் இருந்ததே கிடையாது.

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு (குறள் 426)

என்ற குறளுக்கு ஏற்ப உலகப் போக்கு எப்படிப் புதுமையை நோக்கிச் செல்கிறதோ அதற்கேற்றாற் போல சமூகப் போக்கும் மாற்றம் அடைந்து கொண்டே தான் போகிறது. உலகப் போக்கு வளர்ச்சி அடைந்து கொண்டே போகும் அதே சமயத்தில் சமூகத்தில் பலவகையான சிக்கல்களும் காலத்திற்கேற்ப தோன்றிக்கொண்டுதான் இருக்கின்றன. இச்சிக்கல்கள் தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டே போனால் உலகத்தில் அழிவே மிஞ்சும். சமூகத்தில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதிப் பாகுபாடு, பெண்ணடிமை ஆகியவற்றை எதிர்த்துச் சமுதாயச் சிந்தனையுடன் பாரதிதாசன் பாடல் பாடினார். சமுதாயத்தில் காணப்படும் இச்சிக்கல்கள் தொடர்பான செய்திகளைப் பாரதிதாசன் கவிதைகளில் அதிகமாகவே காணலாம். மரபார்ந்த சமூகச் சிந்தனைக்கு மாற்றாகப் புதியதொரு சமுதாயத்தை அமைக்க விரும்பினார். சாதியம், தீண்டாமை, பெண்ணடிமை நிலவி வந்த சமூகத்தில் சாதி ஒழிப்பு, பெண் விடுதலை போன்றவற்றை மையமாகக் கொண்டு கவிதைகள் இயற்றினார். தமிழின் தொன்மையான இலக்கிய வடிவமான காப்பியங்களையும் பாரதிதாசன் படைத்துள்ளார். தற்காலச் சமுதாயச் சிந்தனைகளைப் பதிவு செய்யவே பாரதிதாசன் குறுங்காப்பியங்களைப் பயன்படுத்தி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



உள்ளமையை இந்த ஆய்வின் சிக்கலாகக் கூறலாம். ஏனென்றால், காப்பியம் என்பது இயற்கை வருணனை, பாட்டுடைத் தலைவனின் சிறப்பு ஆகிய பல்வேறு கூறுகளையுடையது என இலக்கண ஆசிரியர்கள் வரையறுக்கிறார்கள். இத்தகைய தொன்மையான வடிவத்தைக் கொண்டு தற்காலச் சமுதாயச் சிக்கல்களைப் பாரதிதாசன் வெளிப்படுத்திய முறையை ஆராய்வது சிக்கலுக்குரிய ஒன்றாகும்.

## 1.4 ஆய்வு நோக்கம்

1. பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் இடம்பெற்றுள்ள சமுதாயச் சிந்தனைகளை அடையாளங் கண்டு விளக்குதல்.

2. பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் வெளிப்படும் முற்போக்குச் சிந்தனைக்கு எதிரான மக்களின் நிலைப்பாட்டினை ஆராய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3. பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் இடம்பெற்றுள்ள புதிய தமிழ்ச்சமூக உருவாக்கம் பற்றிய கருத்தாக்கங்களைக் கண்டறிந்து விளக்குதல்.

## 1.5 ஆய்வு வினா / கருதுகோள்

2. பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் இடம்பெற்றுள்ள சமுதாயச் சிந்தனைகள் யாவை?

3. பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் சமூக எதிர்ப்புகள் எங்ஙனம் பதிவு செய்யப்பட்டுள்ளன?

4. பாரதிதாசனின் குறுங்காப்பியங்களில் புதிய தமிழ்ச் சமூகம் பற்றிய கருத்தாக்கங்கள் எங்ஙனம் அமைந்துள்ளன?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.6 ஆய்வின் நன்மைகள்

பாரதிதாசனின் எழுச்சிக்குக் காரணமாக அவர் வாழ்ந்த காலச்சூழல் அமைகிறது. அவருக்குள்ளிருந்த கவிதை இயற்றும் புலமைத்திறம் பாரதியாரால் தூண்டப்படுகிறது. பாரதியாரின் நட்பு பாரதிதாசனை அவரது கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவராக ஆக்கியது. பாரதிதாசனின் ஆசிரியப் பணியும் அவருக்குள்ளிருந்த ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் பரந்து விரிந்த பட்டறிவை வழங்கின. அவர் சார்ந்திருந்த சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் அவரது கவிதைப் பொருள்களாயின. பாரதிதாசன் தம் கவிதைகள் வழி தமிழ்நாட்டு மக்களின் அடிமைத்தனம் ஒழிந்து அனைவரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களிடையே உருவாக்க விரும்பினார். தம் கவிதைகளின் வழி, மக்கள் தவறான வழியில் செல்லாமல் தடுத்து நேர்வழிக்குக் கொண்டு வர முயன்றார். அவர்தம் கவிதைகள் வாயிலாக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பிப் பாடினார். இதனையே இவ்வாய்வு எடுத்துக் காட்டவிழைகிறது. குறுங்காப்பியங்கள் என்றவுடன், காப்பிய வடிவில் எழுதப்பட்டுள்ள இவ்விலக்கியங்கள் சமுதாயக் கண்ணோட்டம் உடையனவாக இருக்குமா என்ற ஐயம் ஏற்படும். பாரதிதாசன் அவர்தம் தனிப்பாடல்களில் மட்டுமின்றி குறுங்காப்பியங்களிலும் சமுதாயச் சிந்தனைகளை மையப்படுத்தி எழுதியதை உணர்த்துவதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கம் ஆகும். தமிழின் தொன்மையான இலக்கிய வடிவத்திலும் தற்காலச் சமுதாயச் சிக்கல்களைப் பதிவு செய்ய முடியும் என்ற கருத்தாக்கத்தை வெளிப்படுத்துவது இந்த ஆய்வால் ஏற்படும் நன்மை ஆகும். சமகாலச் சிந்தனைகளை இலக்கியங்களில் பதிவு செய்யும்பொழுது அக்காலத்தின் வரலாறு, வாழ்க்கை முறை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



ஆகியன எதிர்காலத் தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இந்த ஆய்வானது பாரதிதாசனின் படைப்புகளின்வழி அக்காலச் சமுதாய நிலையை ஆராய்வதுடன் அதில் கூறப்பட்டுள்ள புதிய தமிழ்ச்சமூக உருவாக்கத்திற்கான சிந்தனையையும் வெளிக்கொணர்கின்றது. பாரதிதாசனின் படைப்புகளின்வழி தமிழ்ச்சமூக நிலையையும் பாரதிதாசனின் புத்தாக்கச் சிந்தனையையும் வெளிக்கொணர்வதே இந்த ஆய்வால் விளையும் நன்மை ஆகும். இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்ச்சமுதாயத்தில் காணவிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை இருபதாம் நூற்றாண்டிலேயே களைய விரும்பி தம் படைப்புகளில் அவற்றைப் பாடுபொருளாக்கிப் புதிய சமுதாயத்தை உருவாக்க விழைந்த பாரதிதாசனின் சிந்தனையைத் தமிழ் ஆய்வு உலகிற்கு வெளிப்படுத்துவதே இவ்வாய்வினால் ஏற்படும் நன்மையாகும். பெரியாரியச் சிந்தனைகளைப் பாரதிதாசன் படைப்புகளோடு பொருத்தி ஆராய்ந்ததன்வழி பெரியார் என்ற சமூகவியலாரின் சிந்தனை பாரதிதாசன் என்ற இலக்கியவாதியிடம் வெளிப்பட்ட தன்மையைக் கண்டறிந்ததும் இவ்வாய்வினால் ஏற்பட்ட நன்மையாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7 ஆய்வு எல்லை

பாரதிதாசன் கவிதைகள், குறுங்காப்பியங்கள், நாடகங்கள், கட்டுரைகள், கதைகள் ஆகிய இலக்கியங்களைப் படைத்திருக்கிறார். பாரதிதாசன் பல குறுங்காப்பியங்கள் எழுதியுள்ளார். அவை,

1.சஞ்சீவி பர்வதத்தின் சாரல் (1930), 2.புரட்சிக் கவி (1937), 3.மாந்தோப்பில் மணம் (1938), 4.காதல் குற்றவாளிகள் (1938), 5.எதிர்பாராத முத்தம் (1941),

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi